**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் - 2024**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 88 ஆவது பந்தியின் பிரகாரம் புதிய ஆயுர்வேத தயாரிப்புக்கள் 10 திறந்த சந்தையில் அறிமுகப்படுத்தும் மற்றும் பிரசித்தம் செய்யும் செயற்றிட்டத்திற்காக தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்தினால் 2015 மே மாதம் 26 ஆம் திகதி | சுகாதார மேம்பாட்டு நிதியத்தால் வழங்கப்படும் ரூபாய் 15 மில்லியன் தொகையை மானியமாகக் கருதி வருமானமாகப் பதிவு செய்ய வேண்டும் என்று கணக்காய்வு சுட்டிக்காட்டியிருந்தாலும், அது | நியமத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கு கையளித்து ரூபாய் 15,000,000 நன்கொடையை வருமானமாக கணக்கு வைக்காமல் நடைமுறைப் பொறுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கொள்கைரீதியான இணக்கப்பாட்டிற்கமைய 2015 ஆண்டு தொடக்கம் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு வரை சந்தைப்படுத்தலுக்குரிய 10 தயாரிப்புக்களில் ஒவ்வொரு அலகின் லாபத்தில் இருந்து நூற்றுக்கு 10 வீதம் நிதியத்திற்கு செலுத்தப்பட்ட ரூபாய் 3,266,586 பணத்தை ஒவ்வொரு ஆண்டின் செலவாக குறிப்பிடப்படாமல் நடைமுறைப் பொறுப்புக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. மிளாய்வுக்குட்பட்ட ஆண்டிலும் அந்தத் தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மானியம் என்று எந்த ஆவணத்திலும் குறிப்பிடப்படவில்லை, மேலும் இந்தத் தொகை குறித்து தேசிய சுகாதார மேம்பாட்டு நிதியத்துடன் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும், நிர்வாகத்தின் ஒப்புதலின்படி எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கணக்காய்வு சுட்டிக்காட்டியுள்ளது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இல் குறிப்பிடப்படும் நியமங்களுக்கு அமைவாக கீழ்க் காணும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | | |
| (i) | நியமத்தின் பந்தி 36 இன் படி, மறுமதிப்பீட்டின் போது தொடர்புடைய சொத்து வகையிலே மறுமதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், 2022 ஆம் ஆண்டில் ஆகுசெலவு ரூபா 41,010,767 வான 27 வாகனங்களுள் ஆகுசெலவு ரூபாய் 37,573,800 வான 18 வாகனங்கள் மட்டுமே மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, மறுமதிப்பீடு செய்யப்படாத 09 மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய ரூபா 2,528,501 பெறுமதியுள்ள தேய்மான ஒதுக்கீட்டை மறுமதிப்பீட்டு இருப்பு கணக்கிற்கு மாற்றியதால், தேய்மான ஒதுக்கீட்டை அந்த தொகையால் குறைவாகவும், மறுமதிப்பீட்டு இருப்பு கணக்கின் இருப்பு அந்த தொகையால் அதிகமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீளாயவுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் பிழையை சரிசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | எங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின் ஒரு பகுதி, நிறுவனத்தின் வளாகத்திற்கு வெளியே இருப்பதாலும், பிற காரணங்களாலும் மறுமதிப்பீடு செய்யப்படவில்லை, ஆனால் அந்த மோட்டார் வாகனங்கள் 2022 ஜனவரி 01 திகதி நிலவரப்படி நிர்வாகத்தின் அங்கீகாரத்துடன் அவற்றின் ஆகுசெலவு மதிப்பீடாக கணக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, மறுமதிப்பீடு செய்யப்படாத ஆனால் செலவில் கணக்கிடப்பட்ட 09 மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய ரூபாய் 2,528,501 தேய்மானக் ஒதுக்கீட்டை மறுமதிப்பீட்டு இருப்புக் கணக்கிற்கு மாற்றியது சரியானது. | -மேற்படி- |
| (ii) | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட ரூபா 104,167,093 பெறுமதியுடைய இயந்திரங்கள், நீர் | இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் எதிர்கால மதிப்பீட்டில் ஏற்படும் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கல் உபகரணங்கள், இரசாயனகூட உபகரணங்கள் மற்றும் பட்டியல் உருப்படிகள் 462 இன்னும் பயன்பாட்டில் இருந்தபோதிலும், நியமங்களின் 51இன் படி நடைமுறையல்லாத சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஆண்டுதோறும் மீளாய்வுக்குட்படுத்தி, மதிப்பிடப்பட்ட பிழைகள் அடையாளம் கண்டு இலங்கை கணக்கீட்டு நியமங்களின் இல.08 இன் படி திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆகுசெலவுகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் இந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமானம் மற்றும் பயனுள்ள ஆயுள் குறித்து மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 2015 ஆம் ஆண்டில் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 20,980,575 பெறுமதியுள்ள 09 இயந்திரங்கள் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், அந்த இயந்திரங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கு காட்டப்படவில்லை. அந்த 09 இயந்திரங்களில், 05 இயந்திரங்கள் மட்டுமே கூட்டுத்தாபன வளாகத்தில் இருந்ததாகவும் அவற்றில், Pharmaceutical Grade Ro Water System இயந்திரம் மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும் கணக்காய்வுக்குட்படுத்தப்படும் திகதியான 2025 ஜுன் 12 வரை 04 இயந்திரங்கள் பயன்படுத்தாமல் காணப்பட்டன. | பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட, இந்த நிறுவனத்தால் பயன்படுத்தப்படாத 09 இயந்திரங்கள், 2024 ஜுன் 18 ஆம் திகதி இந்தக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவற்றில் 05 இயந்திரங்கள் இப்போது கூட்டுத்தாபனத்தின் உற்பத்திசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் 04 இயந்திரங்கள் இன்னும் நிறுவனத்தில் உள்ளதாகவும், அந்த அனைத்து இயந்திரங்களுக்கும் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். | நிதித் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக இயந்திரங்களை மதிப்பிடுவதற்கும் கணக்கு வைப்பதற்கும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | ஆயுர்வேதத் திணைக்களத்தினால் திணைக்களத்தின் நிதிநிலைமை பற்றிய கூற்றில் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்துகின்ற ஹெக்டயார் 0.773 வான நிலத்தை குறிப்பிட்டிருக்கும் அதேவேளை கூட்டுத்தாபனத்தினால் அதன் உரித்தை சுவீகரித்துக் கொள்ளாமல் 2017 ஆம் ஆண்டில் ரூபா 366,000,000 என மதிப்பிட்டு, நிதி அல்லாத சொத்தாகப் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | உயர் நிர்வாகத்தின் அங்கீகாரத்துடன், 2025ஆம் ஆண்டில் நிலம் மற்றும் கட்டிடக் கணக்கை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | நியமங்களின் பந்தி 55 இற்கு மாறாக, கூட்டுத்தாபனத்தினால் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை பிரதான சுற்றுடன் இணைக்கத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யாத காரணத்தினால் இயந்திரம் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் போது தேய்மானமாக ரூபா 803,628 ஐ சரிசெய்துள்ள காணரத்தால் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டிற்கான தேய்மான ஒதுக்கீடு அந்தத் தொகையால் அதிகமாகவும், லாபம் அந்தத் தொகையால் குறைத்தும் காணப்பட்டுள்ன. | 2025 ஆம் ஆண்டில் உரிய சீர்செய்தல் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (vi) | ஹெக்டயார் 2.2 பரப்பளவு கொண்ட மதவச்சி மூலிகைத் தோட்டம் 2022 ஆம் ஆண்டு மதவாச்சி பிரதேச செயலாளரினால் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்ட போதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அந்த நிலத்தை மதிப்பீடு செய்து கணக்கு காட்ட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளின் குறிப்பு இல.04 இல் சொத்து, இயந்திர உபகரணங்களின் கீழ் பயன்பாடு தொடர்பான இது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த நிலம் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால், அடுத்த ஆண்டில் நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளில் அதை சரியாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதித் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக நிலத்தை மதிப்பிடுவதற்கும் கணக்கு வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் பந்தி 04 இன் படி, கூட்டுத்தாபனத்தில் நிறுவப்பட்ட ERP கணனி மென்பொருள் அமைப்புக்கு செலுத்த வேண்டிய ரூபா 30,000,000 தொகை ஒரு அருவமான சொத்தாகக் கணக்கிடப்படவில்லை, மேலும் பொறுப்புகளும் அதே தொகையால் குறைத்து காட்டப்பட்டுள்ளன. நியமங்களின் பந்தி 8 இன் படி, கிரயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டிற்கான தேய்மான மதிப்பான ரூபா 1,000,000 குறைத்து கணக்கு வைக்கப்பட்ட காரணமாக இலாபம் அதே தொகையால் அதிகமாகக் காட்டப்பட்டுள்ளது. | தற்போது மென்பொருள் அமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் செயல்படுத்தப்படவில்லை என்பதாகவும், அமைப்பு செயல்படுத்தப்பட்ட பிறகு தொடர்புடைய கணக்கீட்டு உள்ளீடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், ERP மென்பொருள் அமைப்புக்காக மென்பொருள் மேம்பாட்டு நிறுவனத்திற்கு இதுவரை எந்தப் பணமும் செலுத்தப்படவில்லை, அமைப்பு செயல்படுத்தப்பட்ட பிறகு தொடர்புடைய கொடுப்பனவுகள் செய்யப்படும், அதன் பிறகு தொடர்புடைய கணக்கியல் உள்ளீடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | களஞ்சியங்கள் 05 இலும் தீவு முழுவதும் அமைந்துள்ள 16 மருந்து விற்பனைசாலைகளில் காணப்பட்ட முடிக்கப்பட்ட இருப்பு பேரேடுகளில் உள்ள அலகு விலை மற்றும் மதிப்பு நெடுவரிசைகள் இற்றைப்படுத்தப்படவில்லை. நியமங்களின் 27 மற்றும் 28 பந்திகளின்படி மீதமுள்ள இருப்புகளின் ஆகுசெலவு பெறுமதியை தேறிய [illegible] [illegible] ஒப்பிட்டு, அதில் குறைந்த மதிப்பை ஆண்டின் இறுதியில் நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளின் பயன்படுத்துவதற்கு பதிலாக உற்பத்தி ஆண்டின் உற்பத்தி ஆகுசெலவின் அடிப்படையில் 2024 டிசம்பர் 31 திகதிக்கு எஞ்சிய முடிக்கப்பட்ட மருந்து இருப்பின் மதிப்பு ரூபா 262,641,057 கணக்கிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | புதிய கணினி பெகேஜ் நிறுவப்பட்ட பிறகு, மொத்த இருப்பு பேரேட்டை அலகு விலைகள் மற்றும் பெறுமதிகளுடன் பராமரிக்க முடியும் என்பதுடன் மேலும், கூட்டுத்தாபனத்தின் அனைத்து விற்பனை மையங்களையும் வலையமைத்து ஒரு புதிய கணினி பெகேஜ் ஐ அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. | நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் கணினிகள் இல்லாத பிரிவுகளில் மொத்த இருப்பு பேரேடுகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2024 வருடாந்த இருப்பு கணக்கெடுப்பின் போது, ஒரு விற்பனை நிலையம் மற்றும் 02 முடிக்கப்பட்ட இருப்பு களஞ்சியங்களின் இருப்பு கணக்கெடுப்பு அறிக்கையில் புத்தக அலகுகளின் எண்ணிக்கை பதிவு செய்யப்படவில்லை, மேலும் ரூபா 225,241,813 பெறுமதியுள்ள 460 இருப்பு பொருட்களுடன் தொடர்புடைய 658,593 அலகுகளின் குறைபாடுகள் அல்லது உபரிகளை அடையாளம் காண கணக்கெடுப்பு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | 2024 வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின் போது, காலி விற்பனை மையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும், இரண்டு முடிக்கப்பட்ட பொருட்கள் களஞ்சியங்களை (களஞ்சியம் 07 மற்றும் 08) ஒரு களஞ்சியமாக ஒருங்கிணைக்கும் வேலைகள் முடியாத காரணத்தால், பொருட்களின் புத்தக அலகு அளவை கணக்கெடுப்பு அறிக்கையில் சேர்க்க முடியவில்லை என்பதாகவும், இருப்பினும், 2024 டிசம்பர் 31 தகதி நிலவரப்படி முடிக்கப்பட்ட பொருட்களை மதிப்பிடும்போது, பௌதீக மொத்த இருப்பு பொருட்கள் ஆகுசெலவில் கணக்கிடப்பட்டதாகவும், மேலும், விற்பனை மையத்துடன் தொடர்புடைய பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உபரி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் முடிக்கப்பட்ட பொருட்கள் | நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | களஞ்சியத்துடன் தொடர்புடைய பொருட்கள் மொத்த இருப்பு பற்றாக்குறை மற்றும் உபரி அறிக்கைகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | |
| (இ) | விற்பனை நிலையங்கள் 15 மற்றும் 02 களஞ்சியங்களின் இறுதி முடிக்கப்பட்ட மருந்து இருப்பு பெறுமதியைக் கணக்கிடும் போது, 45 இருப்பு பொருட்களுடன் தொடர்புடைய ரூபா 3,502,295 ஆகுசெலவைக் கொண்ட 18,189 இருப்பு அலகுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. 03 விற்பனை நிலையங்கள் மற்றும் ஒரு களஞ்சியத்தின் இறுதி முடிக்கப்பட்ட மருந்து இருப்பு பெறுமதியைக் கணக்கிடும் போது, 05 இருப்பு பொருட்களுடன் தொடர்புடைய ரூபா 76,499 ஆகுசெலவைக் கொண்ட 523 இருப்பு அலகுகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன, இதன் விளைவாக முடிக்கப்பட்ட மருந்து இருப்பு பெறுமதி ரூபா 3,425,795 குறைத்து கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | இந்த விற்பனை நிலையங்கள் 15 மற்றும் 02 களஞ்சியங்களில் 2024 டிசம்பர் 31 திகதி நிலவரப்படி முடிக்கப்பட்ட மருந்துகளின் கணக்கீடும் போது, கைவிடப்பட்ட இருப்பு ரூபா 3,502,295 பெறுமதி மற்றும் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்த ரூபா 76,499 பெறுமதியின் தேறிய விளைவான ரூபா 3,425,795 பெறுமதி 2025 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்ட மொத்த இருப்புக்கு சரிசெய்தல்கள் செய்யப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இருப்பு மற்றும் கணக்கெடுப்பு அறிக்கைகளின்படி, தற்போதுள்ள இருப்பு அலகுகளை ஒப்பிடும் போது, 09 விற்பனை நிலையங்கள் மற்றும் 02 களஞ்சியங்களில் ரூபா 4,767,427 பெறுமதியுள்ள 12,722 முடிக்கப்பட்ட இருப்பு அலகுகளின் பற்றாக்குறையும், 10 விற்பனை நிலையங்கள் மற்றும் 02 களஞ்சியங்களில் ரூபா 3,550,449 பெறுமதியுள்ள 18,571 முடிக்கப்பட்ட இருப்பு அலகுகளின் உபரியும் இருந்தது. | பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைகளின் அடிப்படையில், நிறுவனத்தின் அனைத்து விற்பனை மையங்கள் மற்றும் களஞ்சியங்களுக்கான பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உபரி அறிக்கைகளை கணக்குப் பிரிவு மூலம் தயாரிக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, களஞ்சியங்கள் மற்றும் மருந்துக் கடைகளில் சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்புகளுக்கு ரூபா 14,908,104 ஒதுக்கப்பட்டது, ஆனால் சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்புகளின் உண்மையான மதிப்பு ரூபா 18,322,395 ஆகும், இதன் விளைவாக ரூபா 3,414,291 குறைவாக ஒதுக்கப்பட்டது. | 2024 டிசம்பர் 31 திகதி நிலவரப்படி களஞ்சியங்கள் மற்றும் விற்பனை மையங்களில் சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,414,291 குறைவாக ஒதுக்கப்பட்ட தொகை, 2025 ஆம் ஆண்டில் கணக்குகளில் சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (ஊ) | மீளாயவாண்டில், 02 மூலப்பொருள் களஞ்சியங்கள் மற்றும் ஒரு | 2024 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | எழுதுபொருள் களஞ்சியத்திற்கான இருப்பு மற்றும் இருப்பு கணக்கெடுப்பு அறிக்கைகளின்படி, 137 பொருட்களில் 1,349 அலகுகள் பற்றாக்குறை இருந்தது, அதன் பெறுமதி ரூபா 1,605,816 ஆகும். மேலும், 03 மூலப்பொருள் களஞ்சியங்கள், போத்தல் களஞ்சியம் மற்றும் எழுதுபொருள் களஞ்சியம் ஆகியவற்றில் 9,700 அலகுகள் உபரி இருந்தது, இதன் பெறுமதி ரூபா 3,582,635 ஆகும். | தொடர்பாக, கணக்குப் பிரிவினால் 07 களஞ்சியங்களுக்கான பொருட்கள் பற்றாக்குறை மற்றும் மிகை அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்கப்படும். | |
| (எ) | போத்தல்கள், பொதியிடல்கள் மற்றும் எழுதுபொருள் களஞ்சியத்தில் பயன்படுத்த முடியாத 28 பொருட்களின் 593,032 அலகுகள் அடங்கும், அவற்றின் பெறுமதி ரூபா 2,113,520 ஆகும் உள்ளடங்களாக இருப்பு கணக்கிடக்கட்டு இருந்தன. | 2024 டிசம்பர் 31 திகதி நிலவரப்படி நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள இந்தக் களஞ்சியங்களின் எஞ்சிய மொத்த இருப்பு பெறுமதி, கணினி பெகேஜில் சேர்க்கப்பட்டுள்ள உள்ளிடப்பட்டுள்ள மொத்த இருப்பு பெறுமதிகளை அடிப்படையாக் கொண்டு சேர்க்கப்படும். | -மேற்படி- |
| (ஏ) | களஞ்சிய இல. 01 மற்றும் 02 இல் உள்ள 98 பொருட்களில் ரூபா 1,284,812 பெறுமதியுள்ள 1,236 கிலோகிராம் மூலப்பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தன, மேலும் 126 பொருட்கள் தொடர்பில் ரூபா 2,696,108 பெறுமதியுள்ள 9,230 கிலோகிராம் மூலப்பொருட்கள் மிகுதியாக இருந்தன. அதுபோல்,தேவையற்ற கொள்முதல் மற்றும் சேமிப்பு காரணமாக 1,958 கிலோகிராம் வெனிவெல்கட்ட பயன்படுத்த முடியாததாகி, உக்கலடைந்து இருந்தது. | ஐயவினாவுடன் இணங்குவதாக காப்பக திணைக்களம் மற்றும் பொலிசினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இந்த கூட்டுத்தாபனத்திற்கு கையகப்படுத்தும்போது, மருந்து உற்பத்திக்குப் பொருத்தமற்ற உக்கலடைந்த பாகங்களுடன் பெறுவதற்கு நேரிட்டதாகவும், அந்த பயன்படுத்த முடியாத இருப்பு அகற்றப்படும் வரை களஞ்சியத்தில் வைக்க நேரிடுவதாகவும், அவ்வாறு அகற்ற வேண்டிய மொத்த இருப்பு பரிசோதிக்கப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (ஐ) | மக்கள் வங்கியின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின்படி, 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திறக்கப்பட்ட கடன்பத்திரக் கடிதங்கள் 03 விளிப்பு கணக்குகளின் மொத்த மீதி ரூபா 1,951,492 ஆக இருந்தபோதிலும், நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளில் அது ரூபா 26,989,398 என ரூபா 25,037,906 | மூலப்பொருட்களின் இறக்குமதி தொடர்பான தீர்வு ஆவணங்களை கணக்குப் பிரிவுக்கு சமர்ப்பிக்க வழங்கல் பிரிவு நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், வழங்கல் பிரிவிலிருந்து தொடர்புடைய ஆவணங்களைப் பெற்ற பிறகு அடுத்த கட்ட | பிழை சரி செய்யப்பட வேண்டும், மேலும் கணக்குப் பிரிவினால் மேற்பார்வை செயல்முறை மீளாய்வு செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் நிதிநிலைமை அறிக்கைகளில் தொடர்ந்து முன்னோக்கி கொண்டுவரப்படும் அந்த மீதி மீளாய்வாண்டிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நெறிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் படி பெறுமதி (ரூபா) | தொடர்புடைய அறிக்கைகளின் படி பெறுமதி (ரூபா) | வித்தியாசம் (ரூபா) | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பு வைப்பு | 25,867,571 | 13,167,073 | 12,700,498 | 2023 க்கு முந்திய பாதுகாப்பு வைப்பு மீதிகள் பாதுகாப்பு வைப்பு பதிவேட்டில் இல்லாததால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. | கணக்கியல் தகவல் மற்றும் தனியான மீதி பட்டியல் சரியான நேரத்தில் சரிபார்ப்பதற்கான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் பட்டோர் | 106,967,889 | 2,223,792 | 104,744,097 | 6 கடன்பட்டோர் தங்களிடம் செலுத்த வேண்டிய நிலுவை தொகை இல்லை என்று கூறியிருப்பது சிக்கலாக உள்ளது, எனவே இந்த நிலுவைத் தொகை தொடர்பான பிரச்சினைகள் தீர்வு காண விற்பனைத் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நேர பகுப்பாய்வு நிலுவைகளை நிதிநிலை அறிக்கைகளின்படி நிலுவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தேவையான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கு எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | விடயம் (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 772 கிராம் எடையுள்ள 09 தங்கத் தகடுகளின் மொத்த பெறுமதி | 1,841,645 | இருப்பை சரிபார்க்க ஆவணங்கள். | 2024 ஆம் ஆண்டில் தங்கத் தொகுதியின் இருப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இருப்பை உறுதி செய்வதற்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | கடன் பத்திரக் கடிதங்களுடன் தொடர்புடைய 10 சதவீத தடுத்துவைப்பு பணம் | 1,894,902 | உப ஆவணங்கள் | இந்த மீதி பல ஆண்டுகளாக உள்ளது, இது தொடர்பான விரிவான தகவல்கள் வழங்கல் பிரிவிடம் பெறப்பட்டு, பொருத்தமான சரிசெய்தல்கள் செய்யப்படும் | உரிய உப ஆவணங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கேள்விப் பத்திர பாதுகாப்பு வைப்பு | 25,867,571 | உப ஆவணங்கள், வைப்பு ஆவணங்கள் மற்றும் நேர பகுப்பாய்வு | 2023 முதல் கேள்விப் பத்திர பாதுகாப்பு வைப்புத் தொகைகள் தொடர்பாக ஒரு பதிவேடு நிறுவப்பட்டு பராமரிக்கப்படும், மேலும் இந்த கேள்விப் பத்திரம் வைப்புத் தொகைகள் தொடர்பான விரிவான தகவல்கள் குறித்து மேலும் விசாரணை நடத்திய பிறகு மேலும் பணிகள் மேற்கொள்ளப்படும். | உரிய உப ஆவணங்கள், வைப்பு ஆவணங்கள் மற்றும் நேர பகுப்பாய்வு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செலுத்தப்பட வேண்டிய வைப்பு | 1,041,015 | உப ஆவணங்கள், வைப்பு ஆவணங்கள் மற்றும் நேர பகுப்பாய்வு | சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய உப ஆவணங்கள், வைப்பு ஆவணங்கள் மற்றும் நேர பகுப்பாய்வு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 15 ஆண்டுகளாக மூலதன இருப்பு | 1,923,741 | உறுதிப் படுத்திக் கொள்ளல் தொடர்பான | இது தொடர்பான தகவல்கள் கணக்குப் பிரிவிடம் இல்லை என்பதாகவும், | 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாறாமல் உள்ளது. | | ஆவணங்கள் | எதிர்காலத்தில் இந்த மீதி தொடர்பில் உயர் மட்ட முகாமைத்துவத்தின் ஆலோசனையின் பிரகாரம் தேவையான சரிசெய்தல்கள் செய்யப்படும். | முன் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | கொடுப்பனவு வவுச்சர் | 11,082,007 | கட்டண வவுச்சர்கள் மற்றும் மூல ஆவணங்கள் | இந்த வவுச்சர்கள் எதிர்காலத்தில் தேடி சமர்ப்பிக்கப்படும். | அனைத்து கட்டண வவுச்சர்களும் தாமதமின்றி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்த ரூபா 2,510,687 பெறுமதியுள்ள 17 கடன்பட்டோர் நிலுவைகளின் அடிப்படையில் ரூபா 2,507,072 தொகை அறவிடாக் கடன்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது, ஆனால் அந்தக் கடன்பட்டோரிடமிருந்து நிலுவைத் தொகையை அறவிட முறையான மற்றும் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | கடனை அறவிட நடவடிக்கை எடுப்பதற்காக, தொடர்புடைய அறிக்கைகள் மாதந்தோறும் விற்பனைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அறவிடப்படாத நிலுவைகள் குறித்து மேலும் விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | கடன்பட்டோரிடமிருந்து செலுத்த வேண்டிய பணத்தை வசூலிக்க முறையான மற்றும் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 முற்பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு பல்வேறு நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய முழுத் தொகையும் முன்பணங்களாகக் கணக்கு வைத்து, காசோலைகள் வழங்கப்பட்டன. 2024 டிசம்பர் 31 திகதிக்கு தொடர்புடைய பொருட்கள் உண்மையில் குறித்த பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பட்டு இருந்தாலும், முன்பணங்களை தீர்க்கப்படாததால முற்பணக் கணக்கில் ரூபா 14,174,725 மீதி காணப்பட்டது. இந்த மீதிக்குள் | 2024 டிசம்பர் 31 திகதி நிலவரப்படி ரூபா 14,174,725 பொதுச் செலவு முற்பணங்களின் இருப்பு, 2024 ஆம் ஆண்டில் காசோலை முன்பணங்கள் பெறப்பட்டிருந்தாலும், 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பொருட்கள் வாங்கப்படாததால் திரட்டப்பட்ட மதிப்புகளை உள்ளடக்கியிருக்கலாம், எனவே பொதுச் செலவு முன்பணங்களின் இருப்பு மதிப்புகள் கடன் வழங்குநர்களாலும் பொதுச் செலவு முன்பணங்களாலும் தெளிவாக மிகைப்படுத்தப்பட்டுள்ளன. | கண்காணிப்பு செயல்முறை மூலம் துல்லியமான கணக்கியலை உறுதி செய்ய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2024 ஜனவரி 01 திகதிக்கு நிலவரப்படி, தீர்க்கப்படாத ரூபா 8,362,165 மீதியும், உள்ளடங்கியது. அதன்படி மீளாய்வுக் செய்யப்பட்ட கடன் வழங்குநர்கள் மற்றும் பொதுச் செலவு முன்பணங்கள் முறையே ரூபா 8,362,165 மற்றும் ரூபா 14,174,725 அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | செயல்நிமித்த உப கட்டுநிதி பெற்ற பதவிநிலை அதிகாரி, பணியை முடித்த உடனேயே அல்லது பணியை முடித்த 10 நாட்களுக்குள் முன்பணத்தை செலுத்தியிருக்க வேண்டும், ஆனால் 26 அதிகாரிகளால் பெறப்பட்ட ரூபா 1,014,950 பெறுமதியுள்ள 40 தேவை நிமித்த உப முற்பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு, பணியை நிறைவு செய்து 10 நாட்களை விஞ்சி 10 முதல் 96 நாட்கள் வரை தாமதம் ஏற்பட்டுள்ளது. | நடைமுறைக் விடயங்களின் அடிப்படையில், செயல்நிமித்த உப கட்டுநிதி பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் பணம் செலுத்தப்பட வேண்டும் என்பதும், ஒரு மாதத்திற்கு மேல் தேவை நிமித்த உப முற்பணங்கள் தொடர்பாக முன்பணங்களைப் பெற்ற அதிகாரிகளுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்படும் என்பதும், 10 சதவீத கூடுதல் கட்டணத்துடன் சம்பளத்திலிருந்து செலுத்தப்படாத முன்பணங்களை அறவிட மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதும், செலுத்தப்படாத முன்பணங்களை வசூலிப்பதற்கான ஆவணங்களை வழங்குவதன் மூலம் இந்த முன்பணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த முன்பணங்கள் அனைத்தும் 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 சம்பந்தப்பட்ட தரப்புக்களும் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளரால் 02 முகாமைத்துவ பதவிகளுக்கு விண்ணப்பித்த இரண்டு விண்ணப்பதாரர்களுக்கு, அவருக்கு சொந்தமான இரண்டு நிறுவனங்களில் சேவை புரிந்ததாக போழியான சேவைச் | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குவதாகவும், இந்தக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் பணிப்பானர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி மேற்கண்ட | ஒரு நிறுவன விசாரணை நடத்தப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் விசேட குற்றத்தடுப்பு விசாரணைப் பணியகத்தின் விசாரணை நடவடிக்கைகளுக்குத் |

| | | | |
|---|---|---|---|
| | சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த நேர்முகப் பரீட்சை சபை அங்கத்தவராகவும், செயற்பட்டு, குறித்த தீர்மானம் எடுப்பதற்கான பணிப்பாளர் சபை கூட்டத்திலும் பங்குபற்றி தேவையான சேவை அனுபவம் இல்லாத விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரண்டு அதிகாரிகளின் சேவையை நிறுத்தவும், போலியான/தவறான ஆவணங்களை அவர்கள் சமர்ப்பித்ததற்கு எதிராக நுகேகொடை விசேட குற்றத்தடுப்பு விசாரணை பணியகத்தில் முறைப்பாடு செய்வதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. பி.எல்.ஜி.எஸ். காஞ்சன அவருக்குச் சொந்தமான ஒரு நிறுவனத்தில் தவறான சான்றிதழ் வழங்குதல், நேர்முகப் பரீட்சை சபையின் செயலாற்றுதல், பணிப்பாளர் சபையில் கடமையாற்றியதன் மூலம் அக்கறைசார் முரண்பாடு காணப்படுவதால், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரை மற்றும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களின் படி இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் வழங்குநராக இருந்த ஒரு நிறுவனத்திற்கும், கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் இடையே ஒரு அக்கறைசார் முரண் (Conflict of Interest) இருப்பது உறுதி செய்யப்பட்டது. பெயரளவு நிறுவனமாக இருந்த இந்த நிறுவனம், அதன் பெயரைப் பயன்படுத்தி கூட்டுத்ததாபனத்திற்கு பிளாஸ்டிக் போத்தல்களை வழங்க சுழ்ச்சியுடன் செயற்பட்டுள்ளது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இந்த பெயரளவு நிறுவனத்திடமிருந்து | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குவதாகவும், இந்தக் கூட்டுத்தாபனத்தில் பதிவுசெய்யப்பட்ட வழங்குநரான சிலோன் நேச்சர் ஆயுர்வேதா (தனியார்) கம்பெனி லிமிடட் மற்றும் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் இடையே ஒரு அக்கறைசார் முரண் (Conflict of Interest) இருப்பதாகவும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அதன்படி, பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி, முன்னாள் முகாமைத்துவப் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 10,891,681 மற்றும் ரூபா 23,227,843 பெறுமதியுள்ள பொருட்களை கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்துள்ளது. கூட்டுத்தாபனத்தில் பிளாஸ்டிக் போத்தல்கள் வழங்குநராக பதிவுசெய்யப்படாத ஒரு நிறுவனத்தை வழங்குநராக தெரிவுசெய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் குறித்த கொள்முதல் குழுக்களுக்கு முகாமைத்துவப் பணிப்பாளரும் அங்கத்தவராக பங்குபற்றியுள்ளார். | பணிப்பாளருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கான கொடுப்பனவுகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன, மேலும் அந்தக் கொடுப்பனவுகளைச் செய்வது தொடர்பாக ஆலோசனை பெற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் பிரதம சட்ட அதிகாரியிடம் இருந்து ஆலோசனை பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | தரமற்ற பிளாஸ்டிக் போத்தல்களை வாங்கியதால், மூடியிலிருந்து ஷாம்பு கசிவு மற்றும் திரவத்தை மேலே தூக்குவதற்கு வழங்கப்பட்ட ஆதரவு போன்ற தரக் குறைபாடுகள் காரணமாக ரூபா 951,805 விலை கொண்ட 105 மில்லி லீற்றர் கோமாரிகா ஷெம்பு 1,907 போத்தல்களும், 95 மில்லி லீற்றர் கோமாரிகா ஷெம்பு 395 போத்தல்களும், 210 மில்லி லீற்றர் வெனிவெல் பொடி வொஷ் 95 போத்தல்களும், 210 மில்லி லீற்றர் பஞ்சவல்கல பொடி வொஷ் போத்தல்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. இந்த தரமற்ற பிளாஸ்டிக் போத்தல்களில் 8,000 அலகுகள் களஞ்சியத்தில் இருந்தபோதிலும், அவற்றை வழங்குநருக்கு வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இந்த அறிக்கையுடன் இணங்குவதாகவும், இந்த கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட (Mold) ஐ பயன்படுத்தி சிலோன் நேச்சர் ஆயுர்வேத (தனியார்) நிறுவனத்திடமிருந்து இந்த போத்தல்களை உற்பத்திசெய்து கொண்டு, பெறப்பட்டுள்ளதுடன் போத்தல் மூடிகளில் காணப்பட்ட உற்பத்திக் கோலாறு காரணமாக சிக்கல்கள் எழுந்ததாகவும், அந்த நிலைமை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டு, பல சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டு அவை பயன்படுத்தப்பட்டன என்பதாகவும், இந்த போத்தல்கள் தற்போது பயன்படுத்தப் படுவதில்லை என்பதாகவும், மீதமுள்ள இருப்புகளை வழங்குநருக்கு திருப்பி அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுத்த வண்ணம் உள்ளதாகவும் தெரிவிக்கின்றேன். | முழு விசாரணையொன்றை நடாத்தி அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 16(2) உப பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட அரச தொழிற் முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆவது பிரிவின் படி அறிமுகப்படுத்தப்பட்ட அரச தொழிற்முயற்சி வழிநடத்தல் கையேட்டின் 6வது அத்தியாயத்தின் 6.6வது பந்தி. | ஒரு நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிநிலை பற்றிய அறிக்கைகள் மற்றும் வரைவு ஆண்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், மீளபய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடுவிலிருந்து 105 நாட்கள் கடந்திருந்தன. மேலும் வரைவு ஆண்டு அறிக்கை 2025 ஆகஸ்ட 21 திகதியளவிலும் சமர்ப்பிக்கப்படவில்லை.. | கூட்டுத்தாபனத்தின் கணினி தரவு அமைப்பை மாற்றியமைப்பதற்கும், காசோலைகள் மூலம் செய்யப்பட்ட நிதி மோசடியைக் கண்டறிய 2025 பெப்ரவரி முதல் தரவு அமைப்பு மற்றும் கட்டண வவுச்சர்களை பரிசோதிப்பதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இதன் காரணமாக நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பது தாமதமாகி வருவதாகவும் கூறப்படுகிறது. | சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 38(1) உப பிரிவின் (இ) பந்தி, 38(2) உப பிரிவு மற்றும் 2022 யூலை 29 திகதிய இல.DMA-02/2022 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை. | நிதிக் கட்டுப்பாட்டுக்கான ஒரு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு நிறுவப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் எனவும், அந்த அமைப்பின் செயல்திறனை மீளாய்வு செய்து, அந்த அமைப்பு திறம்பட இயக்கப்படுவதை உறுதிசெய்ய தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் எனவும், மேற்கொள்ளப்படும் மீளாய்வு எழுத்துப்பூர்வமாக | தேவையான மாற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டு, நிதிக் கட்டுப்பாடு தொடர்பான தேவையான உள்ளக கட்டுப்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன, மேலும் 2006 ஆம் ஆண்டளவில் நிறுவப்பட்ட தற்போதைய கணினி தரவு அமைப்பை மாற்றுவதற்கு ஒரு புதிய ERP அமைப்பை நிறுவும் பணிகள் நடந்து வருகின்றன. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டு, பிரதிகள் கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், ஆனால் இது செய்யப்படவில்லை என்பதாகவும்,நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக சரியான உள்ளக கட்டுப்பாடுகள் இல்லாததால், 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 16,915,307 மற்றும் ரூபா 14,209,392 நிதி மோசடி நடந்துள்ளது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 110 | இழப்பு மற்றும் சேதப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்தாலும், அது உரிய மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அது இற்றைப்படுத்தப்படவில்லை. | உரிய மாதிரிப் படிவத்தின்படி சேத இழப்பு அறிக்கையைத் தயாரிப்பதற்கும், ரூபா 38,000 பெறுமதியுள்ள மோட்டார் வாகத்திற்கு ஏற்பட்ட சேதத்தின் பெறுமதியை சரியாக உள்ளிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 166 | பணத்துடன் பெறப்பட்ட தொடர்புடைய ஆவணங்கள் இற்றைப்படுத்தி வைத்திருக்கப் படாததாலும், சரியான பதிவுகளை வைக்கத் தவறியதாலும், அடையாளம் காண முடியாதுப் போன வருடங்கள் 01 க்கும் 05க்கும் இடைப்பட்ட வங்கிக் கணக்குகள் 04 இல் ரூபா 21,109,827 பெறுமதியுள்ள பணம் வைப்பு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடிக்கையாளர்கள் வங்கிக்கு நேரடியாகச் செலுத்தும் பணம் தொடர்பான தகவல்கள் விற்பனைத் பிரிவுக்கோ அல்லது கணக்குப் பிரிவுக்கோ வழங்கப்படாததால், வைப்புத்தொகையாளர் துல்லியமாக அடையாளம் காணப்படவில்லை என்பதாகவும், வங்கி தொடர்புடைய தகவல்களைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்தின் கொடுக்கல் வாங்களின் நிலை குறித்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும், 05 வங்கி நடப்புக் கணக்குகள் தொடர்பாக அந்த ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் வங்கி கணக்கிணகக் அறிக்கை கணினி மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது, இதற்காக, அனைத்து வங்கி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தரவுகளும் இற்றைப்படுத்தப்பட வேண்டும். தொடர்புடைய தகவல்கள்/மூல ஆவணங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதால், வங்கி கணக்கிணக்க அறிக்கை சரியான நேரத்தில் தயாரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளன. புதிய ERP அமைப்பு நிறுவப்பட்ட பிறகு இந்தப் பிரச்சினைகள் தவிர்க்கப்படும். | -மேற்படி- |

### 1.6.5 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் ஏப்ரல் 2023 முதல் ரூபா 895,000 இருப்பு செயல்படாமல் உள்ளது, மேலும் இந்த நடைமுறைக் கணக்கைப் பராமரிப்பதன் நோக்கம் குறித்து மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கணக்காய்வுக்கு எந்த எழுத்துப்பூர்வ ஆதாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபையின் தீர்மானங்கள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி இலங்கை வங்கிக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது, இந்தக் கணக்கைத் தொடர்ந்து பராமரிப்பதன் அவசியம் மீளாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் அன்றாட நடவடிக்கைகளை நடத்துவதில், பணப்புழக்கங்களை தர்க்க ரீதியாகவும் மற்றும் விவேகத்துடன் நிர்வகிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான வழிநடத்தல் விளைவுகள் ரூபா மில்லியன் 182.92 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 218.08 மில்லியன் ஆகும். அதன்படி, நிதி விளைவில் ரூபா மில்லியன் 35.16 வீழ்ச்சி காணப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முக்கியமாக விற்பனைச் செலவை விட விற்பனைக் கிரயம் அதிகரித்தல் தாபனம் மற்றும் நிர்வாகச் செலவுகளில் அதிகரிப்பு மற்றும் விற்பனைச் செலவுகள் மற்றும் விநியோகச் செலவுகளில் அதிகரிப்பு இந்தக் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

### 2.2 மூலதன வருமானம் மற்றும் செலவு விடயங்கனளின் போக்கை பகுப்பய்வு செய்தல்.

கடந்த ஆண்டை விட மீளாய்வாண்டில் விற்பனை வருமானம் 25.05 சதவீதம் அதிகரித்திருந்தாலும், விற்பனைச் செலவும் 41.87 சதவீதமும், பொது மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூபா 16.35 மில்லியனும் அதிகரித்து, செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 182.92 மில்லியன் மிகையாகக் கிடைத்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

கடந்த ஆண்டை விட, மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப விகிதம் 2.64 சதவீதமும், தேறிய இலாப விகிதம் 16.12 சதவீதமும் குறைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாக அனுமதியின்றி ரூபா மில்லியன் 15 ஐ தாண்டி அதிகரிக்கும் மாதாந்த உற்பத்தி ஆகுசெலவின் அடிப்படையில், கூட்டுத்தாபனத்தின் அனைத்துப் பிரிவு ஊழியர்களுக்கும் மாதாந்தம் ரூபா மில்லின் 02 க்கும் 06 க்கும் இடையிலான தொகை உற்பத்தி ஊக்கத்தொகையாக செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் ரூபா 82,453,412 ஆக இருந்த இந்த ஊக்கத்தொகைச் செலவு, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 65,985,733 ஆக இருந்தது. இருப்பினும், தேவையை சரியாக அடையாளம் காணாமல் உற்பத்தி செய்யப்பட்ட பல பொருட்கள் களஞ்சியங்களில் அல்லது விற்பனை நிலையங்களில் காலாவதியாகுவதுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அத்தகைய காலாவதியான மற்றும் சேதமடைந்த இருப்புகளின் பெறுமதி முறையே ரூபா 12,885,943 மற்றும் ரூபா 6,996,583 வாக இருந்தது. தரக் குறைபாடுகள் காரணமாக களஞ்சியத்திற்கு 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் திரும்பிய பொருட்களின் பெறுமதி ரூபா 2,573,644 ஆகும். அதன்படி, உற்பத்தி ஊக்கத்தொகை செலுத்தும் போது, கூட்டுத்தாபனத்திற்கு வருமானம் ஈட்ட முடியாதுப்போன தரக் குறைபாடுகள் மற்றும் காலாவதியான தயாரிப்புகளுக்கு ஊக்கத்தொகை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடள் நீண்ட காலமாக ஒரு உற்பத்தி ஊக்கத்தொகை திட்டம் செயல்பட்டு வருகிறது, மேலும் இந்த ஊக்கத்தொகை முழு ஊழியர்களுக்கும் வழங்கப்படுகிறது. புதிய ஊழியர் ஊக்கத்தொகை திட்டம் வரைவு செய்யப்பட்டு அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அங்கீகாரம் வழங்கப்படவில்லை. இந்த உற்பத்தி ஊக்கத்தொகையை செலுத்துவதில் பயன்படுத்தப்படும் மாதாந்த உற்பத்தி பெறுமதி 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட உற்பத்தி ஆகுசெலவின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதற்கேற்ப ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. | பல்வேறு செயலாற்றுகை கொண்ட பிரிவுகளை அதன்படி மதிப்பிடுவதற்குப் பதிலாக, உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நேரடியாகப் பங்களிக்கும் ஊழியர்களால் ஏற்படும் உற்பத்தி ஆகுசெலவுகளின் அடிப்படையில் அனைத்துப் பிரிவுகளையும் மதிப்பீடு செய்வது பொருத்தமற்றது. உற்பத்திப் பிரிவக்கு மட்டும் தொடர்புடைய உற்பத்தி அலகுகளில் ஏற்படும் அதிகரிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஊக்கத்தொகையை உற்பத்திப் பிரிவுக்கும், ஏனைய செயலாற்றுகையின் அடிப்படையில் கணக்கிடப்படும் ஊக்கத்தொகையை ஏனைய பிரிவுகளுக்கும் அறிமுகப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1969 மே 11 ஆம் திகதியிடப்பட்ட 14,853/3ஆம் இலக்க இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, கூட்டுத்தாபனத்தின் 07 நோக்கங்களில், ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான தூய தாவர எண்ணெயை உற்பத்தி செய்வதற்கு தூய பசும்பாலைப் பெறுவதற்காக பால் பண்ணைகளைப் பராமரித்தல், மருந்துகள் தயாரிப்பதற்குத் தேவையான தேனை உற்பத்தி செய்வதற்கு தேனீக்களை வளர்ப்பது மற்றும் தேனீ வளர்ப்பை ஒரு வீட்டுத் தொழிலாக அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்தக் கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைக்கப்பட்ட நோக்கங்களுள் உள்ளடங்கும் மருந்து உற்பத்திக்கான தாவர எண்ணெய் உற்பத்தி, பசும்பாலைப் பெறுவதற்காக மாட்டுத் பண்ணைகளைப் பராமரித்தல் மற்றும் தேனைப் பெறுவதற்காக தேனீக்களை வளர்ப்பது மற்றும் தேனீ வளர்ப்பை ஒரு வீட்டுத் தொழிலாக ஆரம்பித்தல் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டாலும் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அல்லது நடைமுறை சூழ்நிலைகளுக்கு ஏற்ப நோக்கங்களை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருடாந்த உற்பத்தித் திட்டத்தின்படி, 13 உற்பத்திகளுடன் தொடர்புடைய 1,505,478 அலகுகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்தாலும், முடிக்கப்பட்ட அலகுகளின் உண்மையான எண்ணிக்கை 527,249 ஆகும், இதனால் 978,229 அலகுகள் அதாவது 65 சதவீதம் முடிக்கப்படாமல் இருந்துள்ளன. | 2024 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திரங்களின் எண்ணிக்கை 3007, முடிக்கப்பட்ட வேலைப்பத்திரங்களின் உண்மையான எண்ணிக்கை 1672, மேலும் சரியான நேரத்தில் மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் மூலப்பொருட்களின் விலையில் ஏற்ற இறக்கங்கள் காரணமாக விநியோக இடையூறுகள் போன்ற காரணங்களால் இலக்கு உற்பத்தியை அடைய முடியவில்லை என்றாலும், 2024 ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி பெறுமதி ரூபா மில்லியன் 606.347 என்ற உகந்த நிலையை எட்டியது. | உற்பத்தி இலக்குகளை சிறப்பாக அடைய வற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்தின்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளில் உள்ள செயல்முறைகளின் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கான செயலாற்றுகை சுட்டிகள் நிறுவப்பட்டு அப்பணிகளின் செயலாற்றுகை மீளாய்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | குணக்காய்வு அறிக்கையுடன் இணங்குவதாகவும், வருடாந்த உற்பத்தித் திட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் தயாரிக்கப்பட்டு, செயல்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கேற்ப முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது, பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும், துறைசார் நடவடிக்கைகளின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கும் அந்த செயல்பாடுகளை மீளாய்வு செய்வதற்கும் செயலாற்றுகை சுட்டிகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவில்லை, 2026 – 2030 காலகட்டத்திற்கான நிறுவனத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். | கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் மற்றும் செயல்முறையின் செயலாற்றுகை மதிப்பிடுவதற்கு செயலாற்றுகை சுட்டிகள் நிறுவப்பட்டு அந்த செயல்பாடுகளின் செயலாற்றுகையை மீளாய்வு செய்ய வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனை வருவாய் ரூபா 1,862,515,000 என மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் உண்மையான வருவாய் ரூபா 1,519,775,447 ஆகும். உண்மையான வருவாயில் 81 சதவீதம் பொதுத்துறையிடமிருந்தும், 19 சதவீதம் தனியார் துறையிடமிருந்தும் பெறப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, தனியார் துறையின் விற்பனை வருவாய் 26 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாகக் குறைந்துள்ளது. சந்தைத் தேவைகளை சரியாக அடையாளம் காணத் தவறியது, சந்தை விலையுடன் ஒப்பிடும்போது விற்பனை விலைகளில் அதிகரிப்பு மற்றும் புதிய விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு | புதிய சந்தைக்கு ஏற்ற வகையில் 2024 ஆம் ஆண்டில் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் முறைகள் தொடங்கப்பட்டுள்ளன, மொத்த விற்பனை வருவாயில் பொதுத்துறையின் பங்கு 75 சதவீதத்தை தாண்டியதால் தொடர்ச்சியான இருப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இந்த கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்படும் ஆயுர்வேத மருந்துகள் மற்றும் மூலிகைச் சாறு மருந்துகள் மருத்துவர்களின் மேற்பார்வை மற்றும் தரக் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்து மருத்துவப் | தனியார் மற்றும் பொதுத் துறைகளில் விற்பனை வருவாயை அதிகரிக்க, சந்தைத் தேவைகளை முறையாகக் கண்டறிந்து புதிய விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு உத்திகளைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்திகளைப் பயன்படுத்தத் தவறியது விற்பனை வருவாய் குறைவதற்கு காரணமாக அமைந்துள்ளன. மேலும், பொதுத்துறை சந்தை விலையுடன் ஒப்பிடும்போது அதிக விற்பனை விலையில் பொதுத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் கூட்டுத்தாபனம் முறையற்ற வித்தில் வருமானத்தை ஈட்டியுள்ளது. மேலும், அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல்களுக்கு மாறாக, விலைமனுக்கோரல் இன்றி பொதுத்துறை நேரடியாக மருந்துகளை கூட்டுத்தாபனத்திடம் இருந்து மட்டுமே வாங்குவதாகவும், எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு இல்லாமல் போகுவதற்கு இடமுண்டு என்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. | பொருட்களையும் சரியான தரத்திற்குப் பயன்படுத்தி தொடர்புடைய பட்டியல் பொருட் குறிப்புகளின்படி தயாரிக்கப்படுகின்றன, போட்டித்தன்மை வாய்ந்த உயர் தரங்களைப் பராமரிக்கும் நிறுவனங்களின் விலைகள் எங்கள் விலைகளுடன் ஒப்பிடும்போது அதே மட்டத்தில் உள்ளன, ஆனால் சந்தையில் சில நிறுவனங்களின் விலைகள் குறைவாக உள்ளன, அவற்றின் தரத்தை உறுதிப்படுத்த முடியாது, ஒப்பீட்டளவில் அதிக விலையில் விற்பனை செய்வதன் மூலம் நிறுவனம் தேவையற்ற லாபம் ஈட்டியுள்ளது என்ற கருத்தை நிராகரிக்கின்றோம், இருப்பினும், முழு சந்தையையும் இலக்கு வைத்து பொது மற்றும் தனியார் துறைகளில் விற்பனையை அதிகரிக்கவும், தயாரிப்புகளை பல்வகைப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (உ) | சந்தையில் ஒரு புதிய உற்பத்தியை அறிமுகப்படுத்துவதற்கு முன்பு ஒரு மாதிரியை தயாரித்து அதன் தரத்தை பற்றிய தரச்சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொண்ட பின்னர் உற்பத்தி செயல்முறைக்குள் நுழைய வேண்டும் என்றாலும் தரப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் சென்டல்வுட் பேஸ் வொஷ் குறைபாடுடையது என்பதால் இதன் விளைவாக ரூபா 984,045 ஆகுசெலவுடைய முறையே மில்லி லீற்றர் 100 போத்தல்கள் 4,504வும், மில்லி லீற்றர் 50 போத்தல்கள் 424 வும், பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன. இந்த குறைபாடுகளைத் தீர்க்க கூட்டுத்தாபனத்திற்கு ஒரு முறையிலும் இல்லாததால், இந்த உற்பத்தியை நிறுத்த நடவடிக்கை | இங்கு உள்ளடங்கும் தரவுகளுடன் நாம் இணங்குகிறோம். தற்பொழுது இந்த வெள்ளை சந்தன உற்பத்திகளுள் சில குறைபாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன, மேலும் இதுபோன்ற நிலைமைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கும், சந்தையில் வலுவான புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும், தொழிநுட்ப குழுவொன்று ITI நிறுவனத்தின் ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம், கூட்டுத்தாபனம் மருத்துவர்கள் மற்றும் | ஒரு புதிய உற்பத்தியை சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கு முன், ஒரு மாதிரியை தயாரித்து, அதற்கு தரச் சான்றிதழ் ஒன்றை பெற்ற பின் உற்பத்தி செயல்முறைக்குள் நுழைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் இந்த உற்பத்திகள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கு பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர்கள், ஆகியோருடன் இணைந்து அமைக்கப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகிறது. | |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்துகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பத்திரகொட உற்பத்திசாலையில் ரூபா 9,095,322 பெறுமதியுள்ள 150 KVA ஜெனரேட்டர் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டிருந்தாலும், மின்பிறப்பாக்கியை பிரதான சுற்றுடன் இணைக்க தேவையான நடவடிக்கைகளை கூட்டுத்தாபனம் எடுக்காததால், அது ஒரு வருடத்திற்கும் மேலாக உற்பத்தசாலையில் பயன்படுத்தாமல் காணப்பட்டுள்ளது. இயந்திரத்திற்கு ஒரு வருட உத்தரவாதம் இருந்தபோதிலும், உத்தரவாதக் காலத்தினுள் விளைத்திறனாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் அடுத்த 06 ஆண்டுகளுக்கு சுட்டிக்காட்டப்பட்ட பராமரிப்பு செலவு விகிதங்களில் கழ் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகிறோம். மேலும் தொடர்புடைய சுவிட்ச் மற்றும் உபகரணங்களுக்கான விவரக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கும் தொழில்நுட்ப பரிந்துரைகளைப் பெறுவதற்கும் வெளிப்புற நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இந்த எதிர்பாராத தாமதம் ஏற்பட்டுள்ளது. இன்றளவில் மின்பிறப்பாக்கி பிரதான மின்சுற்றுடன் இணைக்க தேவையான சுவிட்ச மற்றும் உபகரண தொகுதி நிறுவப்பட்டு அது விளைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை விளைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் ஒருங்கிணைந்த கணினி மென்பொருள் அமைப்பை (ERP System) நிறுவுவதற்காக 05 வருட காலத்திற்கு மாதத்திற்கு ரூபா 500,000 செலுத்தும் முறையின் மூலம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு மொத்தம் ரூபா 30,000,000க்கு விலைமனு | ERP மென்பொருள் அமைப்பை அபிவிருத்தி செய்வதளற்காக, இலங்கை ரெலிகொம் நிறுவனத்துடன் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு 2024 ஜனவரி 19 திகதி ஒரு கொள்முதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளபடி, ERP மென்பொருள் அமைப்பை அபிவிருத்தி செய்து, இந்த கூட்டுத்தாபனத்திற்குள் | - மேற்படி- |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டுள்ளது. இந்த கொள்முதல் வழிகாட்டுதல்களின் 5.4.10(இ) இன் படி நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. மேலும், ஏல ஆவணங்களின்படி 28 வார காலத்திற்குள் இந்த அமைப்பு நிறுவப்பட வேண்டியிருந்தாலும், 02 மாத தாமதம் ஏற்பட்டது மற்றும் முறையான எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறியதால், தாமதக் கட்டணங்களை அறவிட முடியாதுப் போகியுள்ளது. கணினி மென்பொருள் அமைப்புகள் நிறுவப்பட்டு பணியாளர் பயிற்சி வழங்கப்பட்டிருந்தாலும், கூட்டுத்தாபனம் தொடக்க நிலுவைகளை கணினியில் உள்ளிட நடவடிக்கை எடுக்கவில்லை, இதன் விளைவாக கணக்காய்வு திகதியான 2025 ஆகஸ்ட் மாதம் வரை அதாவது 09 மாதத்திற்கு அண்மித்த காலம் இந்த அமைப்பு மற்றும் இந்த ERP கணினி மென்பொருள் அமைப்பு செயற்படுத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,307,151 பெறுமதியுள்ள கணினி மற்றும் ஏனை உதிரிப்பாகங்கள் 79 அலகுகள் பயன்படுத்தாமல் காணப்பட்டுள்ளன. | அமுல்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஒரு மாதத்திற்குள் 5 லட்சம் வீதம் 05 ஆண்டுகளுக்கு மாதாந்த கட்டணத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளன, அதன்படி, பணிக்குழுவுக்கு நடைமுறை பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன் ERP கணினி மென்பொருள் அமைப்பை மிக விரைவில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3.4 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017, 2018, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மூலதன மானியங்களாக பொது திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 102,000,000 இல் ரூபா 26,149,834 அதாவது நூற்றுக்கு 26 சதவீதம் 2025 ஜூன் 30 திகதியாகும் போதும் பயன்படுத்தாமல் வங்கிக் கணக்கு தடுத்து வைக்கப்பட்டு இருந்தது. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகிறோம். மூலதன மானியங்களாக திறைசேரியில் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகள் தொடர்பான திட்டங்கள் நிறைவு செய்யப்படாத காரணத்தினால் அந்தப் பணத்தை வங்கிக் கணக்கில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் கோவிட் தொற்றுநோய் மற்றும் பல நிர்வாக சிக்கல்கள் | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய அத்தியாவசிய மற்றும் முன்னுரிமைத் திட்டங்களை மட்டும் திட்டமிடப்பட்டு, அந்த திட்டங்களை திறம்பட அமுல்படுத்துவதற்கு தேவையான ஒதுக்கீடுகள் மாத்திரம் பொது திறைசேரியில் இருந்து பெற வேண்டும் என்பதுடன் எஞ்சிக் |

| | | |
|---|---|---|
| | காரணமாக மருந்து உற்பத்திசாலை கட்டிடத்தின் பணிகள் தாமதமாகின, அந்தக் கட்டிடத்தின் கட்டுமானம் பணிகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | காணப்படும் மூலதன மானியங்களுக்குரிய திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து அத்தியாவசிய பணிகளை விரைவாக நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 12,430,560 பெறுமதியுள்ள டர்பெண்டைன் கிலோகிராம் 8,930 கொள்வனவு செய்யும் பொழுது, கொள்முதல் வழிகாட்டுதல்களின் 6.3.2, 7.12.1 மற்றும் 8.9.1(ஆ) இன் படி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், ஒப்பந்தம் கைச்சாத்திடப் படாததால், 150 கிலோகிராம் 18 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு வழங்கப்பட்டு, 150 கிலோகிராம் வழங்கப்படாமல் 14 வாரங்கள் கடந்திருந்த போதிலும், தாமதக் கட்டணங்களை அறவிட முடியாதுப் போகியுள்ளது. அதன்படி, மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கொள்வனவு கிலோகிராம் 6,811 ஆனதால் தேவைப்பாடு சரியாக அடையாளம் காணப்படாமல் வருடாந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையுடன் DPC-1-24/01/13 கொள்வனவு தீர்மானத்தின்படி Colombo Commercials நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், கொள்வனவு தீர்மானத்தின்படி தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு முன், அத் தாமதம் தொடர்பான உற்பத்தி நடவடிக்கைகளில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து பரிந்துரை பெறப்பட்டு, தாமதக் கட்டணத்தை அறவிட அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகவும், அதன்படி, சம்பந்தப்பட்ட களஞ்சியத்திற்கு பொறுப்பான மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. | அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் கோவையின் உள்ள வழிகாட்டுதல்களின்படியும் தாமதக் கட்டணம் அறவிட்டுக் கொள்ளுதல் போன்ற நிபந்தனைகள் உள்ளடக்கிய எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், |
| (ஆ)) | தேசிய போட்டி முறையின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கு ரூபா 33,715,000 பெறுமதியுள்ள 12,260 கிலோகிராம் தாவர எண்ணெயை கொள்வனவு செய்வதற்கு செய்தித்தாள் விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தாலும், எந்த ஏலதாரரும் அதற்கான விலைகளை சமர்ப்பிக்கவில்லை, 6,991 கிலோகிராம் தாவர எண்ணெயை வாங்குவதற்கு பதிவுசெய்யப்பட்ட மற்றும் திறந்த சந்தை மூலம் 07 நாட்களுக்குள் மின்னஞ்சல் மூலம் விலைப்புள்ளிகளை அழைக்க 2024 சனவரி 10 ஆந் திகதி | எந்தவொரு ஏலதாரரும் விலைகளைச் சமர்ப்பிக்காததால், மறு கொள்முதல் தீர்மானத்தின் படி பதிவுசெய்யப்பட்ட மற்றும் திறந்த சந்தை நிறுவனங்களிடமிருந்து மின்னஞ்சல் மூலம் அழைப்புகள் செய்யப்பட்டன என்பதாகவும், சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு மாதிரி அறிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை ஆகியவை உள்ளடங்களாக கொள்முதல் தீர்மானத்தின் படி இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதி அளிக்கப்பட்டது. 2024 சனவரி 17 திகதி மின்னஞ்சல் மூலம் தாவர எண்ணெயை வழங்கும் பெரிய நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தபோதிலும், அந்த நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் அழைக்கப்படவில்லை, ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குநர்கள் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து. மேலும், கொள்முதல் வழிகாட்டுதல்களின் 2.8.4(இ), 5.4.10(இ), 6.2.2, 6.3.6, 7.8.4, 8.9.1.(ஆ) ஆகியவற்றின் படி நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. | மேலும் கடந்த ஆண்டுகளில் இருந்து, பெலவத்த மற்றும் மில்கோ நிறுவனம் தாவர எண்ணெயை வழங்கி வருகின்றன என்பதுடன் எங்களால் கோரப்பட்ட அளவுகள் சரியான நேரத்தில் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளின்படி வழங்கப்பட்டுள்ளன என்பதாகவும், | |
| (இ) | மாதிரி பரிசோதனை அறிக்கையில் மீத்தெல் அமில பெறுமான அளவு சர்வதேச தரத்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதிமானத்தை விட அதிகமாக இருந்ததால் மாதிரி பரிசோதனைகள் தோல்வியடைந்தாலும், கூட்டுத்தாபனத்தின் ஒரு மருத்துவக் குழுவினரின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்றது என்ற பரிந்துரை காரணமாக மாதிரி பரிசோதனைகளில் தோல்வியடைந்த வழங்குநரிமிருந்து ரூபா 2,484,531 பெறுமதியுள்ள 2,208 கிலோகிராம் மீத்தெல் தொடர்ந்து கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. கட்டளையில் குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பிறகு பொருட்கள் வழங்கப்படும் போது, வழங்க வேண்டிய காலத்தை தாண்டுகின்ற ஒவ்வொரு வாரத்திற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும் நூற்றுக்கு 1 வீதமும் மற்றும் இரண்டாவது வாரத்திற்னான நூற்றுக்கு 2 வீதமும் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்பதுடன் இரண்டாவது வாரம் முடிந்தவுடன் உடனடியாக ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என விலைமனுக்கோரும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்து போதிலும், ஒப்பந்தத்தை ரத்து | கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளில் சிறிய அளவில்கூட ஏதும் மாற்றங்கள் காணப்பட்டால், இரசாயனகூடம் மற்றும் மருத்துவர்கள் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வரக்கூடிய சந்தர்ப்பங்களில் மட்டும் கொள்வனவு செய்யப்படுவதாகவும், கொள்வனவு தீர்மானத்தின் படி தாமதக் கட்டணத்தை அறவிட முன்னர் அந்த தாமதம் தொடர்பான உற்பத்தி நடவடிக்கைகளில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட களஞ்சியத்திற்கு பொறுப்பான மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின் பேரில் தாமதக் கட்டணம் அறவிடப்படுகிறது. | ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு முரணாக மாதிரிப் பரிசோதகைளில் தோல்வியடைந்தால் கொள்வனவுகளை செய்ய நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதுடன், தாமதக் கட்டணம் அறவிட்டுக் கொள்ளுதல் போன்ற நிபந்தனைகள் உள்ளடக்கிய எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், |

| | | |
|---|---|---|
| செய்யாமல் கால தாமதத்தைப் பொருட்படுத்தாமல் நூற்றுக்கு 2 வீதம் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டு இருந்தது. மேலும், கொள்முதல் கட்டளைகளுக்காக களஞ்சியத்திற்கு பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் அடுத்த கொள்முதல் கட்டளைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | | |

## 3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நோயாளிகளின் மூலிகை மருத்துகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில், ரூபா 45,725,759 மதிப்பீட்டு ஆகுசெலவில் மூலிகை மருந்து உற்பத்திச்சாலையை நிர்மாணிக்கும் திட்டம், ரூபா 37,000,000 திறைசேரி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2020 ஜனவரி 02 ஆம் திகதி வரை ரூபா 12,144,400 செலவில் 30 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்திருந்தாலும், திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பலவீனங்கள் காரணமாக அன்றிலிருந்து கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. 2025 ஜூன் 30 ஆம் திகதியாகும் போது, 06 ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ள இந்த திட்டத்தின் தொடர்புடைய கட்டுமானப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகிறோம். இன்றளவில் மீண்டும் ஒருமுறை அடிப்படைத் திட்டமிடலின் படி கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் (பொறியியல்) அவர்களிடம் இருந்து மேலதிக ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும், தென்படி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமானப் பணிகளை கொள்முதல் குழு அங்கீகரித்துள்ளதாகவும். அதன்படி ஒப்பந்தக்காரருடன் மேலும் கலந்துரையாடல்கள் நடாத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன. | செயற்றிட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முடிந்த விரைவில் ஆரம்பித்து செய்றிட்டத்தை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 2024 டிசம்பர் 31 திகதிக்கு கூட்டுத்தாபனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளனியின் எண்ணிக்கை 375 ஆக இருந்தபோதிலும், அந்த திகதிக்கு உண்மையான ஆளனியின் எண்ணிக்கை 328 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட ஆளனியின் நூற்றுக்கு 13 வீதம் வெற்றிடங்களாக | கணக்காய்வு அறிக்கையுடன் இணங்குகிறோம். முகாமைத்துவ மட்டத்தின் பதவிகளின் விவசாய அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், முகாமையாளர் (வழங்கல்) மற்றும் கணினி தரவு அதிகாரிகள் 2025 ஆகஸ்ட் முதல் ஆட்சேர்ப்பு | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளனி மற்றும் உண்மையான ஆளனி தற்காலத்திற்கு ஏற்ற வகையில் மீளாய்வு செய்யப்பட்டு, ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| இருந்தன அதாவது 51 வெற்றிங்கள் காணப்பட்டன. அதன்படி, முறையே முகாமைத்துவம், உதவியாளர், ஆரம்ப தரத்தின் பதவிகள் 17, 06 மற்றும் 28 என வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ்வாறு வெற்றிடங்கள் காணப்படுவது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை தொடர்பில் தாக்கம் செலுத்தலாம் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட உள்ளனர். ஏனைய சில பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் ஆரம்ப தர மட்டத்திலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்தவுடன் மிக விரைவாக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கொளள்ப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைப்பு | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரலுக்கு’’ இணங்க ஒவ்வொரு அரச நிறுவனமும் செயற்பட வேண்டும் என்றாலும் கூட மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான கூட்டுத்தாபனம் தனது விடயத்துறைக்குள் உட்படும் வேலைகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி போதிய புரிதலுடன் செயற்பட்டு இருக்கவில்லை. அதன்படி, ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க, நிறுவனத்தின் கடமைகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி அடைய வேண்டிய மைல்கற்கள் மற்றும் இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் போதுமான அளவு அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை செயல்படுத்தும் போது இந்த இலக்குகள் தொடர்பில் போதிய கவனம் இருக்கவில்லை என்பதாகவும், அடுத்துவரும் ஆண்டில் இது தொடர்பான கொள்கைகளை உள்ளடக்குதல் மற்றும் செற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையத் தேவையான அடைவுகள் மற்றும் குறிகாட்டிகள் அடையாளம் காணுவதற்கும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |